**செய்தி வெளியீடு எண் : 2063** **நாள் : 17.11.2022**

**"தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" திருத்தியமைப்பு – புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியீடு**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில், உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராகப் பணியாற்றிய ஓய்வு பெற்ற நீதியரசர் திரு எம். தணிகாசலம் மற்றும் உறுப்பினர்கள், தங்களது பதவி விலகல் கடிதங்களை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளனர். அவர்களது பதவி விலகலை ஏற்று, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.வீ.பாரதிதாசன் அவர்களையும் உறுப்பினர்களாக திரு. ச. கருத்தையாபாண்டியன், இ.ஆ.ப., (ஓய்வு); திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., (ஓய்வு); திரு. இரா. சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., (ஓய்வு); திரு. கே. மேக்ராஜ், இ.ஆ.ப., (ஓய்வு); மருத்துவர் முனைவர் பெரு. மதியழகன், முன்னாள் பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் முனைவர் திரு. எஸ்.பி. சரவணன், முதல்வர், கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர், திருப்பூர் மாவட்டம் ஆகியோர்களை நியமனம் செய்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in